குடிசைவாழ் மக்களுக்கு பட்டா வழங்கல்.

*2620—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை, பூங்காநகர் தொகுதி 60-வது வட்டம், பழைய ஜெகநாதபுரத்தைச் சார்ந்த குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, பூங்காநகர் தொகுதி, பழைய ஜெகநாதபுரம் குடிசைப் பகுதியில் தற்போது குடிசைகள் ஏதும் இல்லை. இந் நிலம் தென்னிந்திய ரயில்வேக்குச் சொந்தமானதாகும்.

9—20 மணி

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்காநகர் தொகுதியில் உள்ள பழைய ஜெகநாதபுரத்தில் இருக்கிற குடிசை வாழ் மக்கள் பழைய ஆட்சியினரால் விரட்டப்பட்டு பக்கத்தில் உள்ள இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசிடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே முன்னாள் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த சிவசண்முகம் பிள்ளை அவர்கள் காலத்திலிருந்தே ரயில்வே துறைக்குக் கொடுக்கப்பட்டது. அதற்கான அனுமதி இன்னும் கொடுக்கப்படவில்லை. கிடைத்ததா, இல்லையா என்ற தகவல் இல்லை. அந்தக் கோரிக்கை இன்னும் அரசிடம்தான் இருக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்திருக்கிறது. தேசிய முன்னணி ஆட்சியும் நமது ஆட்சியாக இருக்கிறது. எனவே மத்திய அரசிடம், ரயில்வே துறையிடம் இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணுகி, அங்கேயிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்குகிற முயற்சியை நமது அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்திருக்கிறார்களா, செய்யப்படுமா? அப்படியில்லை என்றால் அரசுக்குச் சொந்தமாக பக்கத்திலேயே இருக்கிற இடத்திலாவது பட்டா வழங்கப்படுமா ? அத்துடன் இன்னொரு கேள்விக்கும் தாங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் பாய் அவர்கள் பழைய........ (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படியொரு ஒட்டு இருப்பதாக எனக்குத் தெரிய வில்லையே. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : எங்களுக்குள்ளே அந்தப் பாச உணர்வு உண்டு. (சிரிப்பு). சட்டமன்றப் பேரவை வினாவில் உள்ள சென்னை பூங்காநகர் பகுதி பழைய ஜெகநாத புரம் நிலத்தைப் பற்றி நிலையான பதிவேட்டில் உள்ள விபரத்தை மாண்புமிகு இரகுமான்கானுக்கு வழங்குகிறேன். கிராம— வேப்பேரி. புல எண். 1286/9. விஸ்தீரணம் 01, 07, 0456/ சி.சி. காணி, சதுரஅடி. உரிமையாளர்—தென்னிந்திய ரயில்வே. பழைய ஜெகநாதபுரத்தில் குடிசைப் பகுதிகள் நிலத்தணிக்கை செய்யப்பட்டதில், அப்படியே காலியாகவே உள்ளது. அங்கே வசித்து வந்த குடிசைவாழ் மக்களுக்கு குடிசைமாற்று வாரியத் தால் நான்காண்டுகளுக்கு முன்னரே மாற்றுக் குடியிருப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட ஜெக நாதபுரத்தில் குடிசை ஏதுமில்லை என்பதாலும், அது ரயில்வே நிலமாக இருப்பதாலும், பட்டா வழங்கும் பரிசீலனை எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசும்போது, கேட்ட கேள்வியில், மேலே மைய அரசு நமது அரசாக இருக்கிற காரணத்தாலும், இங்கே தி.மு.க. அரசு இருக்கிற காரணத் தாலும், மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்த நிலத்தைப் பெறுகிற முயற்சியில் நான் ஈடுபட வேண்டுமென்றும், அப்படி அது ஒத்துக்கொள்ளப்பட்டால், அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க முயற்சி எடுக்கவேண்டுமென்றும் கேட்டிருக் கிறார்கள். நல்ல யோசனை. மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நமக்கு ஒன்றும் தடையில்லை. அப்படி ஒப்புக்கொள்வார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் கோரிக்கை நிறைவேறுவதற்கான முயற்சியில் என்னாலான உறுதுணை நிச்சயம் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தாற்போல, இனியும் ஒரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்குள்ள தேவை இருப்பதாக நான் கருதவில்லை. அவர் கருதினால் கேட்பதும் கேட்காததும் அவர் இஷ்டம். அவரை அனுமதிப்பதும் அனு மதிக்காததும் உங்கள் இஷ்டம்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதிகளுக்கிணங்கவே இரண்டாவது கேள்வி கேட்க உரிமை இருக்கிறது என்று நம்புகிறேன். நம்மு டைய......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை பற்றி இல்லை. அந்த அளவுக்கு முழுமையான பதிலைச் சொல்லிவிட்டதால், அதற்குத் தேவையே இருக்காது என்ற அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

1990 மார்ச் 30]

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த இடத்தில் அவர்களுக்கு பட்டா வழங்க முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லிய காரணத்தால், நான் நிறைவோடு இருக்கிறேன். ஆனால் அதையொட்டி இன்னொரு கேள்வி. அமைச்சரை விழாவிற்கு அழைக்கிற கேள்வி. ஏற்கெனவே பூங்காநகர் தொகுதியில் கிரே நகர் பகுதியில் பெரியார் நகரில் எம்.எம்.டி.ஏ. அப்ரூவல் கொடுத்த சில இடங்களுக்கு அரசின் சார்பில் விழா நடத்த வேண்டும். அங்கே அதிகாரபூர்வமான பட்டா கொடுக்க வேண்டும். அதுபோல் கார்ப்பரேஷன் லைன் என்று சொல்லக்கூடிய சில பகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அங்காளப்பநாயக்கன் தெருவிலே ஆதி ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியும் இருக்கிறது. உத்வார் போன்ற பகுதி இருக்கிறது. அங்கெல்லாம் ஆதிதிராவிட மக்கள் மற்றும் ஆதி ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். ஆக அமைச்சர் பெருமகனார் அவர்களிடத்திலே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எம்.எம்.டி.ஏ. அப்ரூவல் வழங்கியதற்குப் பிறகு நாம் பட்டா கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த விழாவுக்கு அமைச்சர் அவர்கள் அவசியம் வந்து சிறப்பிக்க வேண்டும். அந்த மக்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும். அதற்கு விரைவில் வருவார்களா என்று இந்தச் சபையின் மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப யோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்களுக்கு எனது நன்றியினையும், வாழ்த்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு உறுப்பினர்கள் யாரேனும் அமைச்சரை விழாவுக்கு அழைக்க வேண்டிய தேவை இருந்தால், அது குறித்து மொத்தமாக எழுதிக்கொடுத்துவிட்டால் அதனை அவரிடத்தில் கொடுத்து, விடையை வாங்கிக் கொடுத்து விடலாம் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

திரு. வே. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளுக்குப் பட்டா வழங்குகிறபோது நீண்ட நெடுங் காலத்திற்கு முன்னாலே ஊர்நத்தம், மந்தை என்று வைத்திருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பூங்காநகர் தொகுதியைச் சேர்ந்த கேள்வி.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குகிற பிரச்சினையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூங்காநகர் பகுதி குறித்து மட்டும் தான் கேட்க வேண்டும்.